1981 பிப்ரவரி 2]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் பாங்குகளில் 6¼% வட்டி நகைக் கடன் களுக்கு வாங்கப்படுகின்றது. கிராமப்புற கூட்டுறவு சங்கங்களில், விவசாயிகள் ஏற்கெனவே கடன்பட்டுள்ள காரணத்தினால், நகை களை வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, அதற்கு இந்த அளவில் குறைந்த வட்டி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் தகவல் இல்லை. தகவல் அறிந்து நான் கூறுகிறேன்.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகளுக்கு கடன் கொடுக்கின்ற போது, இந்த கடன் ரூ. 3,000 என்ற அளவில்தான் கொடுக் கிறார்கள். இந்த ரூ. 3,000 என்பதை அதிகரித்துக் கொடுப்ப தற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல ஆலோசனையை அரசு ஏற்கிறது. இதுகுறித்து அரசு தீவிர மாக பரிசீலித்து வருகிறது ; நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Tax on sale of tickets for Cricket Matches

Q.NO.141.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Revenue be pleased to State:

(a) Whether any tax is collected for the sale of tickets by the Cricket Association in Madras for the test matches; and

(b) if so, the details of the tax collected during the tast five years on this account?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிரிக்கட் விளையாட்டை '***' விளையாட்டு என்று சொல்வதால், இதிலே பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருவதால், இதற்கு இன்றையதினம் ஒரு நிரந்தரமான ஸ்டேடியம், நிரந்தரமான தலைவர், நிரந்தரமான காரியதரிசி எல்லாம் இருப்பதால், இந்த அரசாங்கத்திற்கு கூடுதல் வருமானம் வருகின்ற வகையிலே, இதற்கு வரி விதிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விளையாட்டை எல்லோரும் விளையாடுகிறார்கள். எனவே, இதை '***' விளையாட்டு என்று சொல்ல வேண்டியதில்லை. நானே விளையாடியிருக்கிறேன். எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1933-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் கொண்டு வரப்பட்டு நாடகம், இசை நிகழ்ச்சி, திரைப்படங்களுக்கு வரி போடப்பட்டது. பின்பு எல்லாவற்றுக்கும் அவ்வாறு வரி போடவேண்டியதில்லை. கட்டணம் செலுத்துகின்ற நபர்களுக்கு மட்டும் போட்டால் போதுமென்ற நிலையில் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி போடப்படுகிறது. 1958-ல் ஓட்டப்பந்தயம், விளையாட்டு இவைகளுக்கெல்லாம் வரி தேவையில்லையென்று நீக்கப்பட்டது. கிரிக்கட் விளையாட்டு வருமானம் உள்ள விளையாட்டு என்று சொன்னார்கள். அதைப் பற்றிய தகவல் பெறப்பட்டு அரசு ஆராயும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கிரிக்கெட் விளையாட்டைப் பார்ப்பதற்கு டிக்கட் வாங்குகிற நேரத்தில் 500 ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று கொடுத்து வாங்குகிறார்கள். இவ்வாறு அதிகமான தொகை வசூலிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு வருகிற காலங்களிலாவது வரி விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு இதைப் பற்றி யோசிக்கும்.

திரு. சு. பாலன் : நகராட்சிக்குச் சொந்தமான நேரு ஸ்டேடியத்தில் முன்பு பல முறை இந்த கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றதன் மூலம் மாநகராட்சிக்கு நல்ல வருவாய் வந்தது. இப்போது அங்கு நடக்காமல் எம்.எ.சி. கிரவுண்டில் நடக்கிறது. மாநகராட்சி ஸ்டேடியத்திலும் அதை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்கென்று சரியான அமைப்பு ஒன்றை வைத்துக்கொண்டு எந்த ஸ்டேடியத்தில் விளையாட்டை நடத்துவது என்பதை அவர்களே நிர்ணயிக்கிறார்கள். அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. மி. வின்சென்ட் : கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் ஆர்வமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு காம்ப்ளிமென்டரி டிக்கட் அல்லது கன்செஷன் டிக்கட் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் சமமாகத்தான் கருதப்படுவார்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : கிரிக்கெட் விளையாட்டுகளில் எல்லோருமே கலந்து கொள்கிற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்கு வரி விதித்தது பற்றி ஆலோசிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். கிரிக்கெட் விளையாட்டை மேலும் அபிவிருத்தி செய்ய, ஊக்கமூட்ட அந்தவரி விதிப்பை விதிக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? அப்படி விதிக்க வேண்டுமென்றாலும் டெஸ்ட் பந்தயங்களுக்கு மட்டுமே அந்த வரியை விதிக்க அரசு கருதுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு யோசனை செய்யும்.

திரு. ஆர். மணிமாறன் : பாராளுமன்றத்தில் கிரிக்கெட்டுக்கு என்று தனியாக டீம் அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களைக்கொண்டு அத்தகைய கிரிக்கெட் டீம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைத்தால் நல்லது.

குடும்பக் கட்டுப்பாடு போன்ற கருத்துத் திரைப்—
படங்களுக்கு வரி விலக்கு.

*வினா எண். 142. திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு முதலிய கொள்கைகளைப் பிரசாரம் செய்யக் கூடிய திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறதா ?